# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆனி - 31 வியாழன் 15.07.2021 மலர் - 2, இதழ் - 100


## டி.என்.பி.என்.சியில் மாவோயிஸ்ட் ஆதரவு பாதிரி




விஜயபாரதம்

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தில் ஒரு தலைவர் மற்றும் 14 உறுப்பினர்கள் இருக்க வேண்டும். தற்போது இந்த அரசு பணியாளர் தேர்வாணையத்தில் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி பாலச்சந்திரன் தலைவராக இருக்கிறார். இந்த தேர்வாணையத்தில் உறுப்பினர் பதவிக்கு 12 இடங்கள் காலியாக இருந்தன. இவற்றை நிரப்பும் வகையில், நான்கு பேர் புதிய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.


அதில் டி.என்.பி.எஸ்.சி உறுப்பினர்களாக ஐ.ஏ.எஸ் அதிகாரி எஸ்.முனியநாதன், பேராசிரியர் கே. ஜோதி சிவஞானம், முனைவர் கே. அருள்மதி மற்றும் ஏற்காடு டான் போஸ்கோ அருட்தந்தை ஏ. ராஜ் மரியசூசை ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக தமிழக மனிதவள மேலாண்மைத் துறை அரசாணை வெளியிட்டது. டி.என்.பி.எஸ்.சி வரலாற்றில் முதன்முறையாக பாதிரி ஒருவருக்கு உறுப்பினர் பதவி அளிக்கப்பட்டுள்ளது.

இவர் சலேசிய கிறிஸ்தவ சபையைச் சேர்ந்தவர். ஏற்காட்டில் உள்ள டான் போஸ்கோ அமைப்பில் பணியாற்றி வருகிறார். இந்த அமைப்பு அண்மையில் உயிரிழந்த மாவோயிஸ்ட் மற்றும் நக்சல் ஆதரவாளர் ஸ்டேன் லூர்துசாமியின் நினைவாக பழங்குடியினரை குறிவைத்து நிவாரண உதவிகள் வழங்கும் போர்வையில் மத மாற்றத்தில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

பெண்களை இழிவாக சித்தரித்து பேசும் திண்டுக்கல் லியோனி பாடநூல் கழகத்தின் தலைவராக நியமித்த தி.மு.க, தற்போது நக்சல் ஆதரவாளரும் மதமாற்றத்தில் ஈடுபடுபவருமான ஒரு பாதிரியை தமிழ்நாடு பணியாளர் தேர்வாணைய உறுப்பினராக நியமித்துள்ளது.

இந்த நியமனம் தற்போது பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. மதச்சார்பற்ற அரசுப் பணியில் பாதிரி ஒருவரை நியமித்தது ஏன் என நெட்டிசன்களும் கேள்வி எழுப்பி வருகின்றனர். இதுவே பா.ஜ.க இந்த இடத்தில் ஒரு ஹிந்துமதத் தலைவரை அமர்த்தினால் தி.மு.கவும் அதன் தோழமைக் கட்சிகளும் எப்படி எதிர்வினையாற்றி இருக்கும் என்பதை மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

# மன்னிப்பு கேட்டார் இயக்குனர்




விஜயபாரதம்

ஓம்டாக்கிஸ்நிறுவனம்தயாரிப்பில் இயக்குனர் விஜயமுருகன், இயக்கத்தில் உருவாகிறது 'ஜகா' திரைப்படம். சிவபெருமானுக்கு முகக்கவசம், ஆக்சிஜன் சிலிண்டர் அணிவித்து இப்பட போஸ்டர் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு பொதுமக்கள், ஹிந்து இயக்கங்கள் என பல தரப்பில் இருந்தும் கண்டன தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து பட இயக்குனர் விஜயமுருகன், மன்னிப்பு கேட்டுள்ளார். அவரது அறிக்கையில், 'ஜகா பர்ஸ்ட் லுக் போஸ்டர் பலரின் விவாதத்திற்கு உள்ளாகி உள்ளது. கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை மீறக்கூடாது என கடவுளே சொல்வது போன்றுதான் அந்த போஸ்டர் வடிவமைக்கப்பட்டது. படத்தில் எந்த இடத்திலும் கடவுள் அவமதிக்கப்படவில்லை. பலரின் மனது புண்பட்டததை அறிந்து வருந்துகிறேன், அதற்காக மன்னிப்பு கோருவதோடு கொரோனா இல்லாத உலகம் அமைய கடவுளை வேண்டுகிறேன்' என தெரிவித்துள்ளார்.

# புத்தக வெளியீடு



விஜயபாரதம்

விஷ்வ ஹிந்து பரிஷத்தின் அகில பாரத இணை செயலாளர் கோ. ஸ்தாணுமாலயன் எழுதிய 'நூற்றாண்டு காணும் மாப்ளா கலவரம்' புத்தக வெளியீட்டு விழா, சென்னையில் நடைபெற்றது. கேரள மாநிலம் மலப்புறம் மாவட்டத்தில் ஹிந்துக்கள் மீது நடைபெற்ற கொலைவெறி தாக்குதல் மற்றும் தீவிர மதமாற்றம் நடைபெற்ற நூறாவது ஆண்டில், அங்கே அது சமயம் ஹிந்தக்களுக்கு நடைபெற்ற அநீதிகளை இந்த புத்தகத்தில் சரியான முறையில் விளக்கியுள்ளார் ஸ்தாணுமாலயன்.



# தடுப்பூசி சாதனை



விஜயபாரதம்

நாடுழுவதும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணி துரிதப்படுத்தப்பட்டு உள்ளது. உலகில் மிக வேகமாக தடுப்பூசி செலுத்தும் நாடாக தொடர்ந்து பாரதம் திகழ்கிறது. தடுப்பூசி பற்றாக்குறை ஏற்பட்டுள்ள மாநிலங்களில் மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம், போதிய தடுப்பூசிகளை ஒதுக்கீடு செய்து வருகிறது. தடுப்பூசி செலுத்துவதில், அதிகபட்சமாக 18 முதல் 44 வயதுக்குட்பட்டோருக்கு 39 சதவீத தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது. 45 முதல் 60 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு 34.5 சதவீதம் தடுப்பூசியும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 26.5 சதவீதமும் தடுப்பூசியும் செலுத்தப்பட்டு உள்ளது என மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

# த.மு.மு.க. அலுவலகம் சூறையாடல்



விஜயபாரதம்

சென்னை மண்ணடியில் உள்ளது தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்ற கழகத்தின் தலைமை அலுவலகம். இந்த அமைப்பின் தலைவராக சமீபத்தில் ஹைதர் அலி என்பவர் தேர்வு செய்யப்பட்டார். புதிய நிர்வாகிகளின் பெயர்கள் அடங்கிய பேனரை கட்சி அலுவலகம் முன்பு த.மு.மு.க நிர்வாகிகள் மாட்டியுள்ளனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, திரண்ட மனிதநேய மக்கள் கட்சியின் 100க்கும் மேற்பட்டோர், த.மு.மு.க அலுவலகம் முன்பு வைக்கப்பட்டு இருந்த பேனரை அடித்து நொறுக்கினர். கட்சி அலுவலகத்தையும் சூறையாடினர். மனிதநேய மக்கள் கட்சி தொண்டர்கள் தாக்கியதில் தமுமுகவினர் 2 பேர் காயம் அடைந்தனர். இது குறித்து பேசிய த.மு.மு.க நிர்வாகிகள், த.மு.மு.கவை கைப்பற்றி தனது கட்டுப்பாட்டுக்குள் வைக்க விரும்பிய ம.ம.க தலைவரும், பாபநாசம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஜவாஹிருல்லா உத்தரவின் பேரிலேயே இந்த தாக்குதல் நடைபெற்று இருப்பதாகவும், இதற்கு காவல்துறையினர் துணையாக இருந்ததாகவும் குற்றம் சாட்டினர். இத்தாக்குதலை கண்டித்து, தமிழகம் முழுவதும் த.மு.மு.க சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று. தெரிவித்துள்ளனர். இதனையடுத்து அங்கு, பாதுகாப்பு பணிக்காக நூற்றுக்கணக்கான காவல்துறையினர் குவிக்கப்பட்டனர்.

## அர்ச்சகர் நலவாரியம் கோரிக்கை



விஜயபாரதம்

தமிழகத்தில் ஹிந்து கோயில்களில் பணிபுரியும் ஆயிரக்கணக்கான அர்ச்சகர்களுக்கு உதவும் வகையில், அர்ச்சகர் நல வரியம் அமைக்க வேண்டும் என தமிழக அரசுக்கு ஆதி சைவ சிவாச்சாரியார் சேவா சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

## பிராந்திய மொழிகளில் தேர்வு



விஜயபாரதம்

மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், 'ஊரக வங்கிகளுக்கான அலுவலக உதவியாளர், அலுவலர் நிலை 1 ஆகிய பணிகளுக்கான தேர்வுகள் 13 பிராந்திய மொழிகளில் நடத்தப்படும். மற்ற வங்கித் தேர்வுகள் அனைத்தும் ஹிந்தி, ஆங்கில மொழிகளில் மட்டுமே நடத்தப்படும். மேலும், பொதுத்துறை நிறுவனங்களிலும் பிராந்திய மொழிகளில், தேர்வு நடத்தப்படுவது தொடர்பாக குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு 15 நாட்களுக்குள் தனது பரிந்துரைகளை வழங்கும். அதுவரை வங்கியில் ஆட்சேர்ப்பு நிறுவனத்தால் துவங்கப்பட்டுள்ள தேர்வு நடைமுறை நிறுத்திவைக்கப்படுகிறது' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சி.பி.ஐ. சோதனை

திருநெல்வேலியைச் சேர்ந்த ஜாகீர் உசேன் என்பவர் தனியார் வாடகை கார் நிறுவனம் நடத்தி வருகிறார். இவர், வெளிநாட்டு பணப்பரிமாற்றம் செய்யும் தொழிலிலும் ஈடுபட்டு வந்தார். அவரது அலுவலகத்தில் அதிக அளவில் வெளிநாட்டு பணப்பரிமாற்றம் நடைபெற்றதாகவும், வெளிநாட்டு பணப்பரிவர்த்தனையில் கோடிக்கணக்கில் மோசடி நடைபெற்றுள்ளதாகவும் தொடர்ந்து புகார்கள் வந்தன. இதனையடுத்து, சி.பி.ஐ மற்றும் அமலாக்கத் துறை அதிகாரிகள், கொக்கிரக்குளம் வசந்த நகரில் உள்ள ஜாகீர்உசேனின் வீடு மற்றும் திருநெல்வேலி ஸ்ரீபுரத்தில் உள்ள அவரது வாடகை கார் அலுவலகம் ஆகியவற்றில் சோதனை மேற்கொண்டனர். இதில் பல முக்கிய ஆவணங்கள் கிடைத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.



விஜயபாரதம்

# சாலையில் நிறுத்தப்படும் வாகனங்கள்



விஜயபாரதம்

சாலைகளில் சட்டவிரோதமாக நிறுத்தப்படும் வாகனங்களால் சாலைகள் குறுகி போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. அதன் மறைவுகளில் ஒழுங்கீனங்கள் நடைபெறுகின்றன. தேசிய நகர்புறக் கொள்கை விதிகள் கடைபிடிக்கப்படுவதில்லை. இதனால் வாகன ஓட்டிகளும் பொதுமக்களும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் ஸ்ரீகிருஷ்ண பகவத் என்பவர் மனுத் தாக்கல் செய்தார். இதனை விசாரித்த நீதிபதி, நாடு முழுவதும் இந்த பிரச்சனை உள்ளது எனவே இந்த மனுத் தொடர்பாக, மத்திய மாநில அரசுகள் 6 வாரங்களில் பதிலளிக்க வேண்டும் என உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார்.

# வெளியே சர்ச் உள்ளே . . .



விஜயபாரதம்

கன்னியாகுமரி மாவட்டம் நிதிரவிளை அடுத்த எஸ். டி. மாங்காடு பகுதியில் மதபோதகர் லால் சைன்சிங்கின் வீட்டில், 'பெடரல் சர்ச் ஆப் இந்தியா' என்ற பெயர் பலகை வைக்கப்பட்டிருந்தது. கிறிஸ்தவ மதபோதகர் என்பதால் அந்த வீட்டிற்குள் கிறிஸ்த்துவ மதபோதனை நடைபெற்று வருவதாக அப்பகுதி மக்கள் கண்டுகொள்ளாமல் இருந்தார்கள். அடிக்கடி ஆண்கள் குடித்துவிட்டு வருவது, பெண்கள் இரவு நேரத்தில் வெளியே செல்வதை பார்த்த அப்பகுதியினருக்கு சந்தேகம் வந்தது. மேலும், உள்ளூர் மக்களை மத போதனைக்கு அனுமதிக்கவில்லை அந்த கிறிஸ்தவ போதகர். இதனால் அப்பகுதியினருக்கு சந்தேகம் வந்துள்ளது. மத போதனை என்ற பெயரில் விபச்சாரம் நடப்பதாக ஏற்பட்ட சந்தேகத்தை அடுத்து காவல்துறைக்கு தகவல் அளித்தார்கள். காவல்துறையினர் அங்கு சென்று சோதனை நடத்தினர். தொடர்ந்து லால் ஷைன்சிங் மற்றும் பனங்காலையை சேர்ந்த ஷைன், மேக்கோடு ஷிபின், ஞாறான்விளை ராணி, சுகந்தி என ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர். 19 வயது இளம் பெண் உட்பட இரண்டு பெண்கள் காப்பகத்தில் ஒப்படைக்கப்பட்டனர். அதில் 19 வயது பெண்ணைஅவரின் தாயே விபச்சாரத்தில் ஈடுபடுத்தியது தெரியவந்தது காவல்துறையினரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

# பூட்டானில் பீம்



விஜயபாரதம்

Bharat Interface for Money (பீம்), என்பது பாரதத்தின் டிஜிட்டல் பேமெண்ட் செயலி. இது கியூஆர் கோட் (QR Code) ஸ்கேனிங்குகளுக்கான யு.பி.ஐ (Unified Payment Interface) வழியாக இயங்குகிறது. இதன் மூலம் பல்வேறு வங்கி கணக்குகள் ஒற்றை மொபைல் செயலியில் ஒருங்கிணைக்கப்படுகிறது. இது பயனர்களுக்கும், சில்லறை வர்த்தகர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்றாக மாறியுள்ளது. பாரதத்தில் கொரோனா பொதுமுடக்கத்தின்போது, பணம் செலுத்துவதற்கான எளிய, நம்பகமான வழிமுறையாக பீம் யு.பி.ஐ மாறியது. 2020 21 நிதியாண்டில், 41 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான 22 பில்லியன் பணப் பறிமாற்றங்கள் இதன் வழியாக நடைபெற்றுள்ளது. இந்நிலையில், பீம் யு.பி.ஐ பணப்பறிமாற்றத்தை ஏற்றுக்கொண்ட முதல் நாடாக பூடான் மாறியிருக்கிறது. அதே போல சிங்கப்பூரை தொடர்ந்து பீம் யு.பி.ஐயினை வணிக இடங்களில் ஏற்றுக்கொள்ளும் இரண்டாவது நாடாக பூடான் மாறியிருப்பதாக NPCI சர்வதேச பேமெண்ட்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. NPCI என்பது இந்தியாவில் சில்லறை பேமெண்ட்கள் மற்றும் தீர்வு முறைகளை இயக்குவதற்கான ஒரு குடை அமைப்பு. காணொளி காட்சி மூலம் பூடானில் பீம் யு.பி.ஐயினை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சியில் பேசிய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், “மகிழ்ச்சியின் நிலத்தை” காணச்செல்லும் பாரத சுற்றுலா பயணிகளுக்கு இது உதவிகரமாக இருக்கும் என தெரிவித்தார்.

---

# உற்சாகமூட்டிய பிரதமர் மோடி



விஜயபாரதம்

ஜூலை 23 முதல் ஆகஸ்ட் 8 வரை டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற உள்ளது. இதில் பாரதத்தின் சார்பில், 126 வீரர்களும் வீராங்கனைகளும் பங்கேற்க உள்ளனர். இவர்கள் 18 விளையாட்டுகள் உள்ளடக்கிய 69 போட்டிகளில் பங்கேற்க உள்ளனர். இதில் தமிழகத்தை சேர்ந்த 11 வீரர்களும் இடம்பெற்றுள்ளனர். ஒலிம்பிக்கில் பங்கேற்க உள்ள இந்திய வீரர், வீராங்கனைகளை ஊக்கப்படுத்தும் வகையில், பிரதமர் மோடி காணொளி மூலம் கலந்துரையாடினார். ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றி பெற்றே தீர வேண்டும் என்ற மனஅழுத்தத்துடன் விளையாட வேண்டாம். முழு திறமையை வெளிப்படுத்துங்கள். ஒலிம்பிக் முடிந்த உடன் நாம் நேரில் சந்திப்போம் என கூறினார். இந்த காணொலி நிகழ்ச்சியில் மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சர் அனுராக் தாகூர், இணை அமைச்சர் நிசித் பிரமனிக், சட்ட அமைச்சர் கிரண் ரிஜிஜு ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# சட்டங்கள் விரைவில் திருத்தப்படும்



விஜயபாரதம்

குஜராத்தில் காந்தி நகரில் அமைந்துள்ள தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சிறப்பு கருத்தரங்கில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கலந்துகொண்டார். அப்போது அவர், 'போலீசார் மீது இரண்டு குறைகள் கூறப்படுவது வழக்கம். ஒன்று, அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை, மற்றொன்று வரம்புக்கு மீறி செயல்படுகின்றனர் என்பது. காவலர்கள் நியாயமாக செயல்பட, குற்ற விசாரணையில் சரியான சாட்சிகள் வேண்டும். அறிவியல்பூர்வமாக இதை நாம் அணுக வேண்டும். மூன்றாம் நிலை சித்ரவதைகளில் இருந்து நாம் வெளியே வர வேண்டும். இதற்கேற்ப, தற்போதுள்ள சூழலுக்கு ஏற்ப, இந்திய தண்டனை சட்டம், குற்றவியல் நடைமுறை சட்டம், இந்திய சாட்சிகள் சட்டம் ஆகியவற்றில் பெரிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். இதனை மத்திய அரசு ஆலோசித்து வருகிறது. ஆறு மாதங்களுக்கு மேல் தண்டனை கிடைக்க வாய்ப்புள்ள குற்றங்களில், தடய அறிவியல் விசாரணையை கட்டாயமாக்க வேண்டும். அறிவியல்பூர்வமான விசாரணையின் வாயிலாக எந்த குற்றத்திலும் சரியான, நியாயமான சாட்சிகள், ஆதாரங்கள் கிடைக்கும்' என அவர் பேசினார்.

---

# கொரோனா கொல்லும் பயங்கரவாதிகள்



விஜயபாரதம்

கொரோனா பொதுமக்களை மட்டுமல்ல, கம்யூனிச பயங்கரவாதி களையும் விட்டுவைக்கவில்லை. பல பயங்கரவாதிகள் கொரோனாவால் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர். முன்னதாக, உத்தராகண்ட், பஸ்தர் காவல்துறைத் தலைவர் சுந்தர் ராஜ், பயங்கரவாத மாவோயிஸ்டுகள் சரணடைந்து, கொரோனாவுக்கான சிகிச்சை மற்றும் தடுப்பூசிகளை எடுத்துக்கொள்ள வேண்டுகோள் விடுத்தார். ஆனால், யாரும் சரணடையவில்லை. இந்நிலையில், 'தர்பா பிரிவின்' ராணுவத் தளபதியான வினோத் என்ற ஹேம்லா ஹங்கா கொரோனா காரணமாக சில நாட்களுக்கு முன் உயிரிழந்தார். இவரது தலைக்கு ரூ. 15 லட்சம் அறிவிக்கப்பட்டிருந்தது. இதேபோல, மாவோயிஸ்ட் மத்திய குழு உறுப்பினர் ஹரிபுஷன், அவரது மனைவி ஷரதா ஆகியோரும் கொரோனாவுக்கு பலியானார்கள். அவர்களது தலைக்கு ரூ. 50 லட்சம் அறிவிக்கப்பட்டது. கடந்த சில மாதங்களில், பல மாவோயிஸ்ட்டுகளை கொரோனா சத்தமே இல்லாமல் கொன்றுள்ளது.

# அசாமின் கால்நடைகள் பாதுகாப்பு சட்டம்



விஜயபாரதம்

அசாமில் இருந்து இறைச்சிக்காக அதிக அளவில் மாடுகள் உட்பட பல கால்நடைகள் அண்டை மாநிலங்கள், அண்டை நாடுகளுக்கு கடத்தப்படுகின்றன. இதில் 1,000 கோடி அளவுக்கு முறைகேடு வர்த்தகம் நடைபெறுகிறது. மேலும், சுற்றுசூழல் சீர்கேடு, விவசாய பாதிப்பு உள்ளிட்டவை ஏற்படுகின்றன. பொதுமக்களுக்கும் இதனால் பல அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. இதனைத் தடுக்க, அம்மாநில முதல்வர் ஹிமந்த பிஸ்வா ஷர்மா, சட்டசபையில், கால்நடைகள் பாதுகாப்பு சட்ட மசோதாவை தாக்கல் செய்தார். இந்த மசோதாவின்படி, 'அசாமில் ஹிந்துக்கள், ஜைனர்கள், சீக்கியர்கள், மாட்டிறைச்சியை சாப்பிடாத சமூகத்தினர் வாழும் பகுதிகள், கோயில்கள் உள்ளிட்ட வழிபாட்டுத் தலங்கள் உள்ள இடங்களில், 5 கி.மீ. சுற்று வட்டாரத்தில் மாட்டிறைச்சி விற்பனை செய்யக் கூடாது. உரிய அங்கீகாரம், அனுமதி இல்லாமல் மாடுகளை இறைச்சிக்காக வெட்டக்கூடாது, மாடுகளை இறைச்சிக்காக ஏற்றி செல்லக் கூடாது. மாட்டிறைச்சி விற்பனை செய்தாலோ, மாடுகளை ஏற்றி சென்றாலோ 6 மாதத்தில் இருந்து 8 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையுடன் ரூ1,000 முதல் ரூ. 5 லட்சம்வரை அபராதம் விதிக்கப்படலாம். இந்த சட்டத்தை மீறி செயல்பட்டு தப்பி ஓடி தலைமறைவானால் அவர்கள் வாழ்ந்த இடங்களிலும் பொது இடங்களில் அவர்களது புகைப்படங்கள் ஒட்டப்படும். ஜாமீனில் வெளிவர முடியாத பிரிவுகளில் வழக்குகள் தொடரப்படும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு தேசம் முழுவதிலும் உள்ள பெரும்பான்மையான மக்களிடம் இருந்து ஆதரவு கிடைத்துள்ளது. சில காங்கிரஸ் தலைவர்கள் உள்ளிட்டோர் எதிர்ப்பும் தெரிவித்துள்ளனர்.



# பி - 8 விமானம் பாரதம் வந்தது



விஜயபாரதம்

அமெரிக்காவின் போயிங் நிறுவனத்திடமிருந்து 8 பி 8ஐ போர் விமானங்களை 2013ல் கொள்முதல் செய்தது மத்திய அரசு. இந்தப் போர் விமானங்கள் நீர்மூழ்கிக் கப்பலைத் தாக்கி அழிக்கும் திறன் கொண்டவை, பேரிடர் மீட்புப் பணியிலும் இவை சிறப்பாக செயல்படும். பாரதத்தின் கடற்பகுதியை கண்காணிப்பதில் பி8ஐ விமானங்கள் முக்கிய பங்கு வகித்து வருகின்றன. பாதுகாப்பு நடவடிக்கையின் தேவையையடுத்து, கூடுதலாக 4 போர் விமானங்களை வாங்க கடந்த 2016ல் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதனையடுத்து 9வது பி8ஐ போர் விமானம் கடந்த ஆண்டு நவம்பரில் வந்தது. தற்போது 10வது போர் விமானம் பாரதம் வந்தடைந்தது.

# மிஷனரிகள் குறித்து காவல் துறை உஷார்

சத்தீஸ்கரில் உள்ள சுக்மா மாவட்டத்தின் காவல்துறை கண்காணிப்பாளர் சுனில் சர்மா, அனைத்து காவல் நிலையங்களுக்கும் ஒரு சுற்றறிக்கையை அனுப்பியுள்ளார். அதில், கிறிஸ்தவ மிஷனரிகள், பழங்குடி மக்களை பல்வேறு விதங்களில் கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றி வருகின்றனர். இதில் அவர்கள் அதிதீவிரமாக செயல்படுகின்றனர். அப்படி மாறிய பழங்குடி கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்தவத்திற்கு மாறாத பழங்குடியினருக்கும் இடையே சமீப காலமாக மோதல்கள் அதிகரித்துள்ளன. இது பழங்குடி பிராந்தியங்களில் வன்முறைக்கு வழிவகுக்கும். எனவே, இதனை காவல்துறையினர், உளவுத்துறையினர் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார். இதற்கு கிறிஸ்தவ மிஷனரிகள் வழக்கம்போல எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.



# வலையில் சிக்கிய மீம்கள்















# யதி நர்சிங்கானந்தை கொல்ல முயற்சியா ?



விஜயபாரதம்

உத்தர பிரதேசம் காஜியாபாத்தில் உள்ள தஸ்னாதேவி கோயில் பூஜாரியும் ஹிந்துக்களின் விழிப்புணர்வுக்கு பாடுபடுபவருமான யதி நரசிங்கானந்தைக் கொல்ல முஸ்லிம் பயங்கரவாதிகள் பல்வேறு சமயங்களில் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர். சமீபத்தில் அவரைக் கொலை செய்ய வந்த ஒரு வெளிநாட்டவர் உட்பட நான்கு பேர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டதாக அவர் தனது சமூக வலைத்தளத்தில் தெரிவித்துள்ளார். அந்த நால்வரை கைது செய்துள்ளது உண்மைதான் என்று ஒப்புக்கொண்ட புலந்த்ஷார் காவல்துறையினர், அவர்கள் பெங்களூருவை சேர்ந்தவர்கள், வழித்தவறி வந்தவர்களாக சந்தேகிக்கப்படுகிறது. தொடர்ந்து விசாரித்து வருகிறோம். இதுவரை அவர்கள் கொலை முயற்சியில் ஈடுபட்டதற்கான ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை என தெரிவித்துள்ளனர்.

# பாரதத்தின் உதவி தேவைப்படும்



தலிபானுடனான சமாதான பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தால், பாரதத்தின் ராணுவ உதவி எங்களுக்கு தொடர்ச்சியாக பல ஆண்டுகள் தேவைப்படலாம் என பாரதத்திற்கான ஆப்கானிஸ்தான் தூதர் ஃபரித் மமுண்ட்சே தெரிவித்துள்ளார். ஆனால், அது நேரடி ராணுவ உதவியாக இருக்காது. ராணுவப் பயிற்சியாகவே இருக்கும் என அவர் தெரிவித்துள்ளார். பாரத ராணுவம், ஆப்கன் அரசுப் படைகளுக்கு பயங்கரவாத தடுப்பு, விமானப் பயிற்சி, தொலைத்தொடர்புப் பயிற்சி உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகளை ஏற்கனவே வழங்கி வருகிறது. மேலும், எம்.ஐ 24 வி ஹெலிகாப்டரையும் வழங்கியுள்ளது. ஆப்கனில் இலவசமாக நாடாளுமன்றக் கட்டடம், அணை கட்டுதல் உள்ளிட்ட பல்வேறு மனிதாபிமான உதவிகளையும் பாரதம் தொடர்ந்து செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# Googleக்கு அபராதம்

விஜயபாரதம்

உலகெங்கிலும் தற்போது செய்தி நிறுவனங்களின் அச்சு சந்தாக்கள் குறைந்து வருகிறது. ஆனால்,இணையத்தில் இந்த செய்திகளை குறித்து இணைய தேடுதலில் காட்டும் கூகுள், அதில் வெளியாகும் விளம்பரங்களிலிருந்து கோடிக்கணக்கில் வருவாயை ஈட்டுகிறது. ஆனால், அதிலிருந்து செய்தி நிறுவனங்களுக்கு பணம் செலுத்துவதில்லை. இது குறித்து கடந்த 2020ல் பிரான்சை சேர்ந்த பல செய்தி நிறுவனங்கள் போட்டி ஆணையத்தில் புகாரளித்தனர். இது தொடர்பாக ஊடக நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த ஆணையம், கூகுளுக்கு உத்தரவிட்டது. அதனை கூகுள் கண்டுகொள்ளவில்லை. எனவே இவ் வழக்கில், பதிப்புரிமைக்குட்பட்ட செய்திகளுக்கு தகுந்த தொகையை ஊடக நிறுவனங்களுக்கு 2 மாதங்களுக்குள் கொடுக்க வேண்டும். தவறும் பட்சத்தில் நாளொன்றுக்கு 8 கோடி ரூபாய் கூடுதல் இழப்பீடாக செலுத்த வேண்டியிருக்கும் என ஆணையம் கூகுளை எச்சரித்தது. மேலும், போட்டி ஆணையம் அதன் வரலாற்றில் இதுவரையில்லாத அளவு ரூ. 4,400 கோடி அபராதம் விதித்தது. இதற்கு, போட்டி ஆணையத்தின் இத்தீர்ப்பு மிகவும் அதிருப்தி அளிப்பதாக கூகுள் அறிக்கை வெளியிட்டுள்ளது.

# வெவ்வேறு தடுப்பூசிகள் ஆபத்து



விஜயபாரதம்

உலக சுகாதார அமைப்பினுடைய விஞ்ஞானி டாக்டர் சௌமியா சுவாமிநாதன் கொணொலி வாயிலாக செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர், 'பல நாடுகளில் கொரோனா 2வது அலை முடிவுக்கு வரவில்லை. அதற்குள் 3வது அலை பற்றிய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காக இரண்டு வெவ்வேறான நிறுவனங்களின் தடுப்பூசிகளை போட்டுக்கொள்ளலாம் என பரிந்துரை செய்வது ஆபத்தை ஏற்படுத்திவிடும். இது குறித்த தரவுகள் நம்மிடம் இல்லை. 2வது, 3வது, 4வது டோஸ் தடுப்பூசிகளை எப்போது யார் போட்டுக்கொள்வது என்று மக்கள் தீர்மானிக்கத்தொடங்கினால், அது நாடுகளை குழப்பமான நிலைக்கு தள்ளிவிடும். இது பற்றிய ஆய்வுகள் நடைபெறுகிறது. அதுவரை அனைத்து நாடுகளும் பொறுமை காக்க வேண்டும்' என கூறினார்.


# பாகிஸ்தானுக்கு ஆப்கன் எச்சரிக்கை



விஜயபாரதம்

ஆப்கானிஸ்தான் துணைத் தலைவர் அம்ருல்லா சலேஹ், தனது சமூக வலைத்தளப் பதிவில், 'தலிபான் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். அவற்றில் ஒன்று பாகிஸ்தானின் சிறப்பு பயங்கரவாத எதிர்ப்பு அமைப்புகளால் வழிநடத்தப்படுகிறது. ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க துருப்புக்கள் திரும்பப் பெறுவது ஒரு வெற்றிடத்தை உருவாக்கியுள்ளது. அரசுப் படைகள் சீராக செயல்படுகின்றன. தலிபான்கள், பல இடங்களை ஆக்கிரமித்துள்ளனர். ஆனால், அவர்களால் நாட்டை ஆள முடியாது. தலிபான் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். பாகிஸ்தான் தலிபான்களை வெளிப்படையாக ஆதரிக்கிறது. இது அண்டை நாடு மீது தாக்குதல் நடத்துவதற்கு சமம். தலிபான்களின் குடும்பங்கள் பாகிஸ்தானில் பாதுகாப்பாக வசிப்பதாக பாகிஸ்தான் உள்துறை அமைச்சரே கூறியுள்ளார். இறந்த தலிபான்களின் உடல்கள் புதைப்பதற்காக மீண்டும் பாகிஸ்தான் கொண்டு செல்லப்படும் அளவுக்கு அவர்களின் நெருக்கம் தலிபான்களுடன் உள்ளது' என தெரிவித்தார். முன்னதாக, தலிபான்களிடம் இருந்து இரண்டு மாகாணங்களை அரசுப் படைகள் மீட்டுள்ளன என ஆப்கன் அரசு தெரிவித்துள்ளது.

# கல்விக்கண் திறந்த கர்ம வீரர்



விஜயபாரதம்

காமராஜர் விருதுநகர் மாவட்டத்தில் பிறந்தார்.தனது ஆறு வயதிலேயே தந்தையை இழந்த காமராஜரால் 11வயதுக்கு மேல் கல்வியைத் தொடர முடியவில்லை. குடும்பத்தை காக்க மளிகை கடையில் பணியாற்றினார். காந்தியடிகள் மீதும் பாரத சுய ஆட்சி கொள்கை மீதும் பற்றுக் கொண்டிருந்தார். ஜாலியன் வாலாபாக் படுகொலை இவர் வாழ்வில் திருப்பத்தை ஏற்படுத்தியது. இதுவே இவர் முழுநேர தேசிய விடுதலைப் போராட்ட வீரராக மாறக் காரணமாக அமைந்தது. உப்பு சத்தியாக்கிரகம் உள்ளிட்ட பல்வேறு முக்கிய போராட்டங்களில் பங்கேற்றார். ஆறு முறை ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டு 3,000 நாட்களுக்கு மேல் சிறையில் அடைக்கப்பட்டார்.

விடுதலைக்குப் பின்னர் தமிழகத்தின் இரண்டாவது முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டார். கல்வியின் அவசியம்

அறிந்த காமராசர் அனைவருக்கும் கட்டாயக் கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார். மாணவர்கள் நலன் கருதி, ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு ஆரம்ப பள்ளி, ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு உயர்நிலைப்பள்ளிகளை உருவாக்கினார் .உணவிற்கே வழியில்லாத சூழலில் கல்வி எங்கே கற்பது என்ற நிலை ஏற்படாதிருக்க மதிய உணவு திட்டத்தை அறிமுகப்படுத்தினார். ஜாதி வேற்றுமைகளை ஏட்டளவில் எதிர்க்கும் கட்சிகளுக்கு மத்தியில் மாணவர்களிடையே விழிப்புணர்வினைத் தூண்டிட இலவச சீருடையை வழங்கினார்.

25 சதவீத மானியத்துடன் விவசாயக்கடன் திட்டம், மாதாந்திர தவணையில் சிறு குறு விவசாயிகளுக்கு மின் பம்பு செட்கள், தமிழகமெங்கும் 1,628 தண்ணீர் தொட்டிகள், 3,000 கிணறுகள் அமைத்தார். எதற்கு இந்த பகுதியில் தேவையில்லாமல் ஒரு அணை என்று கேள்வி எழுப்பியவர்களுக்கு நான்கு மாடுகள் இந்த நீர் தேக்கத்தில் தண்ணீர் குடித்து விட்டு போகட்டுமே என்று மிடுக்காக பதிலளித்து இவர் ஆட்சியில் கட்டப்பட்ட அணைகள் தான் இன்று பல மாவட்டங்களின் பாசனத்திற்கு அடிப்படை. ஐ.ஐ.டி மெட்ராஸ், ஐ.சி.எப் சென்னை, மணலி ரிபைனரி, நெய்வேலி நிலக்கரி சுரங்கம், திருச்சி பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல் லிமிடெட்(BHEL) முதலிய பல தொழிற்சாலைகள் இவர் ஆட்சியில் தொடங்கப்பட்டவையே.

1963ஆம் ஆண்டு வரை தொடர்ந்து தமிழகத்தின் முதல்வராக இருந்தார். கட்சி கொள்கைப் பாதையிலிருந்து தவறுவதை உணர்ந்த காமராஜர் காந்தி ஜெயந்தி அன்று முதல்வர் பதவியிலிருந்து விலகினார். கட்சியின் மூத்த தொண்டர்களையும் பதவி விலகச் சொன்னார். பாரதம் முழுவதும் 6 மத்திய அமைச்சர்களும் 6 முதலமைச்சர்களும் இவர் கூற்றுக்கிணங்க பதவி விலகினர்.

இவர் ஆளுமையையும் தன்னலமற்றக் கொள்கையைக் கண்டும் இந்திய தேசிய காங்கிரசின் தேசியத் தலைவர் பொறுப்பு வழங்கப்பட்டது. நேருவின் மறைவிற்கு பின்னர் இவரை பிரதமராக பதவியேற்க மூத்தத் தலைவர்கள் அறிவுறுத்தினர். அதனை கண்ணியமாக மறுத்தார் காமராஜர். லால் பகதூர் சாஸ்திரி, இந்திரா காந்தி ஆகியோரை பிரதமராக்கிய கிங் மேக்கரான இந்த பெருந்தலைவர், இருமுறை நாடாளுமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்தார். இந்திய தேசிய காங்கிரஸ் இரண்டாக பிரிந்த மறு தேர்தலிலேயே தோற்கடிக்கப்பட்டார். காந்தியடிகள் மீது அளவற்ற பற்றுக் கொண்ட காமராஜர்1975ல் காந்தி ஜெயந்தி அன்று இறைவனடி சேர்ந்தார்.



Dr. பிரவீன் ராஜ்குமார்